3. அறிவிப்புகள்

(அ) சட்டமன்றப் பேரவை வைர விழா தேதி மாற்றம் மற்றும் வைர விழா நினைவு வளைவு அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி 1952 ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இவ்வருடம் 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளதையடுத்து, 29–10–2012 அன்று நடைபெறுவதாக இருந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா, 30–11–2012 வெள்ளிக்கிழமை அன்று காலை 10–00 மணிக்கு, சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இதன் தொடக்கமாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா என்றென்றும் மக்கள் நினைவில் நிற்கும் வகையில், சென்னை, இராஜாஜி சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னத்திற்கும், தலைமைச் செயலகத்திற்கும் இடையில், தமிழ்நாடு "சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவு" ஒன்றை பிரம்மாண்டமான முறையில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டமைக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பிலும், பேரவையின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வைர விழா நினைவு வளைவிற்கான அடிக்கல்லை, 29–10–2012 திங்கட்கிழமை அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் நாட்ட இசைவு தெரிவித்துள்ளார்கள் என்பதை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வமயம் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழா நடைபெறும் நேரத்தில், சட்டமன்றப் பேரவைத் தலைவராகப் பணியாற்றும் பெரும் வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.